சிவமயம்

News aperin Ceylon

P. M. G. NO. H. A 89/300 of 1939.

இந்துசாதனம்

சரோதிருகுஷ்
(1889)
ஆவணிமாதம்
28-க்கு ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை போய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். நிகை] யாழ்ப்பாணம்—சர்வசித்துஸு சித்திரைமீ உசு ஏ (1947 மே 9 வெள்ளிக்கிழமை) [இல கo

(1) 1947 மே 9.

உலகியல் உயர்வு

அதற்கு மதமாற்றம் அவசியமா?

மக்கள் ஒழுகுவதற்குரிய நெறிகளை வரம்புப்படுத்திக் கூறும் மதங்கள் பலவாகக் காணப்பெறுகின்றன. அம்மதக் கொள்கைகள் அனைத்தும் உலகியலில் ஒருவன் வாழ்க்கை நடத்தவேண்டிய முறைகளை எடுத்துக் காட்டி அவ்வழியில் மாறுபடாதிருப்பானேல் அவன் மறுமையில் உயர்நிலை பெறுவான் என்பதையே வலியுறுத்துகின்றன.

இவ்வாறு மறுமைப் பேற்றுக்குக் காரணமாகிய இம்மை வாழ்க்கை முறைகளை வெவ்வேறான நெறிகளாக மததாபகர்கள் கூறும், மதக் கொள்கைகளைக் கையாளும் ஆன்றோர்களின் போக்கையொட்டி அவர்கள் ஒழுக்கத்தைக் கைக்கொண்டார்கள், உலகத்து நிலைபெற்றுள்ள எல்லா மதங்களும், மறுமைப்பேற்றை அடிப்படையாகக் கொண்ட இம்மைநிலை கூறுவனவேயன்றி வேறும் உலக வாழ்க்கையை மட்டும் உரைப்பனவல்ல. எண்ணில்லாத மதங்களும், மதவரம்புகளும் இந்நாளில் நாட்டிடை இருக்கக் காண்கின்றோம்.

மக்களுக்குக் கடவுளோடு தொடர்புகொண்ட கருத்துக்களைத் தெளிவுபடுத்துதற்கு அடிகோலத்தோன்றிய சில மதங்கள் இந்நாளில் அடிப்படையான அதனை மறந்து ஆள் சேர்ப்பதில்முனைந்து வேலைசெய்வது, என்ன அறியாமை? உலகியலில் உயர்வுபெற விரும்புவது மனிதனைப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் இயற்கையாக உள்ளத்தில் எழுவது. மதக் கொள்கைகளில் மனம் பற்றுதலவனுக்கூட உலகியல் உயர்வை விரும்பியேயிருப்பான். உண்மை விடுத்த போலிமதக் கொள்கையாளர் இதனையறிந்து தங்கள் மதங்களுக்கு ஆட்சேர்த்து மதத்தினரின் எண்ணிக்கையைப் பெருக்குவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு உலகியலிற் பல்வேறு சிறப்புக்கள் தருவதாகக் கூறி இந்துமத மக்களை மயக்கித் தம் வயப்படுத்த முயன்று வருகின்றனர்.

ஏமாற்று வித்தை

உலகிய லுயர்வுக்கு மதமாற்றம் தான் வேண்டுமா? வேறு வழிகளுண்டா? என்பதனைச் சிறிதும் ஆராயாது அறிவு குறைந்த மக்கள் அவர்கள் வலையிற் சிக்கிவிடுகின்றனர். சிறிய குழந்தைகள் கையில் தின்பண்டங்களைக் கொடுத்து ஏமாற்றி அவர்கள் அணிந்திருக்கும் அணிகலன்களைப் பறிப்பது கயவர்செயலென்று நாமறிவோம்.

இக்கீழ்மைச் செயலை ஒரு மதக்குருக்களோ, மதநிலையமோ செய்யத் தொடங்குமானால், காலத்தின் கோலையைப்பற்றி என்ன சொல்லலாம்? வாய்க்குச் சுவையும், வயிற்றுக்குணவுமாகச் சிறிது கொடுத்து பெற்றோர் தந்ததும் பெரு மதிப்புள்ளதுமான அணிகலன்களைப் பிடுங்குவது பேதைமையென்றும். அச்செயல் புரிவோர் அரசனுணக்குட்பட்டு ஒறுக்கப்படுதற்கு உரியர் என்றும் அனைவரும் அறிவர்.

புறமதம் சேர்வது ஏன்?

பசியே வாராதிருக்க வழி கூறுவன மதக் கொள்கைகள். தோன்றிய பசியைமட்டும் போக்கி மேலும் பசியை உண்டாக்குவன உலகியற் கொள்கைகள். உடலுக்கும் உயிருக்கும் சுவை தருவன மதக்கொள்கைகள். உடலுக்குமட்டும் சுவைதருவன உலகியற் கொள்கைகள். மதக் கொள்கைகள் முன்னோர் தேடிவைத்தன. உலகியற் கொள்கைகள் நம்மால் அடையத்தக்கன. மதக்கொள்கைகள் உயர்ந்தன. உலகியற் கொள்கைகள் தாழ்ந்தன. இவற்றை ஆழ்ந்து சிந்தித்தால் மத உயர்வு விளங்கும்.

இனி, புறமதம்புகும்எவரும்தம்மதத்தஇயல்பையோஏனையமதங்களின் இயல்பையோ அறிந்து ஒன்றை விடுத்து ஒன்றை நாடுவதில்லை என்பது உலகறிந்த ஒன்று. மதத்திற்கு ஆட்சேர்க்கும் புற மதத்தான் எவனும் இந்துமதத்தின் இயல்பையோ ஏனைய மதங்களின் இயல்பையோ அறிந்து மக்களை உய்தியில் நிலைபேறுக்குதல் வேண்டுமென்னும் உயர்ந்த கருத்துடன் உழைப்பதில்லை என்பதும் உண்மை. எனவே மதத்தினுடைய அடிப்படைக் கருத்துக்கு மாறான நிலையில் தான் மனிதர்கள் மதங்களில் சேருவதும் சேர்ப்பதும் நிகழ்கின்றன என அறிகின்றோம்.

"நஞ்சுபொதி வெல்லம்"

இவ்வாறு உண்மைமறைத்துபோலிகள் மல்குவது மதத்திற்கு இடையூறு என்பதை இவர்கள் உணருதல் வேண்டும். இந்துமதத்தினர் "பல்வேறு பிரிவினர்களாகவும், பல்வேறு ஒழுக்க முடையவர்களாகவும், பல்வேறு கடவுட் கொள்கையுடையவர்களாகவும் இருக்கின்றனர்" என்பது முதலான சில சிறு வழக்கங்களை எடுத்துக்காட்டி அவையனைத்தும் தம் மதங்களில் இல்லையென்றும், மக்களனைவரும் ஒரு தரத்தினரேயென்றும், மேற்பட்டதாயினும் கீழ்ப்பட்டதாயினும் ஒழுகுகின்ற ஒழுக்கங்கள் மக்களனைவருக்கும் ஒரு தரத்தில் தானிருக்க வேண்டுமென்றும், கடவுள் ஒருவரேயென்றும் இவைபோல்வன சிலவற்றைக் கூறி எளிமையில் இந்து மதத்தினரை ஏமாற்றுகின்றனர் "நஞ்சுபொதிவெல்லம்" கொன்றே தீரும் என்பதை நம்மவர்கள் உணருகின்றார்களில்லை.

வறியவனுக்குச் சிறிது செல்வந் தருவதாக வஞ்சித்தும், படித்துவிட்டு வேலையில்லாத தவிப்பவனுக்குவேலை தருவதாக மயக்கியும், மங்கையர் மையலில் மயங்கும் மனிதனுக்கு அழகுகளையளிப்பதாக ஆசை காட்டியும், அறிவுத்துறையில் மக்கள் முன்னேறுதற்கு அரும்பாடுபடுகின்றவர்களேபோல், பள்ளிகளில்கல்லூரிகளில் இந்துமதச் சிறுவர் சிறுமியர்களை எளிதிலே வசப்படுத்தியும், உடல் நோய்க்கு மருந்து தந்து உதவுவார் போன்று மருத்துவச்சாலைகளை நிறுவி ஏழை மக்களைக் கைவசப்படுத்தியும், பிள்ளைப்பேறு கருதி வரும் பெண்மகளை மருத்துவச்சாலைத்து மாதர்களின் வழி மனங்கெடுத்து மாற்றியும், மதம் வளர்க்கும் பிற மதத்தினரின் வஞ்

தொடர்ச்சி 6ம் பக்கம்

யூதப் பிரச்சினை

பலஸ்தீனில் அக்கிரமம்

பலஸ்தீனத்தில் யூதப் பயங்கர இயக்கத்தினர் தம் பயங்கரமான செயல்களைத் தொடர்ந்து நடத்திவருகின்றார்கள். அவர்கள் பலஸ்தீனத்துச் சிறைச்சாலைச் சுவர் ஒன்றைத் தகர்த்து 251 யூதச் சிறையாளரை விடுதலை செய்துவிட்டனர். இவ்விஷயமாக 8 பிரிட்டிஷாரும் கொலைசெய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

இது இவ்வாறாக, பலஸ்தீனத்து யூதர்பிரச்சினையை ஆராய்ந்துவரும் ஐக்கியதேசஸ்தாபனத்து அரசியற் சபையிலே, யூதப் பிரதிநிதிகளும் அராபியப் பிரதிநிதிகளும் தத்தம் கட்சியைச் சென்ற செவ்வாய்க்கிழமை எடுத்து வாதித்தனர். யூதர் தம் கட்சியை விளக்கி 300 பக்கம் கொண்ட ஓர் மகஜரைச் சமர்ப்பித்தனர்.

மகாத்மாவின் செய்தி

பலஸ்தீனத்தில் நிகழும் சம்பவங்கள் சம்பந்தமாக மகாத்மாகாந்தியடிகள் அரபுநாடுகளுக்கு ஓர்உருக்கமான வேண்டுகோள் விடுத்திருக்கிறார். யூதசாதியினர் உலகின் பல பாகங்களிலும் மிகவும் இம்சிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை ஆதரித்து ஒதுக்கிடம் கொடுப்பது, பரந்த இஸ்லாத்தைத் தழுவும் அரபுமக்களின் மகத்தான கடமை என்று அவர் அதில் குறிப்பிட்டிருக்கிறார். யூதர்க்கும் மகாத்மா ஓர் செய்தி விடுத்திருக்கிறார். பயங்கரச் செயல்களினால் ஒர்போதும் எடுத்த கருமத்தைச் சாதிக்கமுடியாது. மூன்றும் பேர்வழியின் உதவியை நாடாது. அரபுச்சாதியினருடன் யூதர் அன்பும் விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டு, தங் கட்சியை அவர்களுக்கு விளக்கி ஒத்துவாழவேண்டுமென்றும் மகாத்மா அச்செய்தியிற் குறிப்பிட்டிருக்கிறார்.

பாராளுமன்றம்

அக்டோபரிற் கூடலாம்

சோல்பெரித்திட்டத்தின்படி அமைக்கப்படும் புதிய பாராளுமன்றத்துப் பிரதிநிதிகள் சபை அக்டோபர்மாதம் 7ம் திகதி அல்லது 14ம் திகதி கூட்டப்படலாம் என்று ஓர் செய்தி கூறுகிறது.

பிரதிநிதிகள் சபையின் முதற்கூட்டத்தில் சபைத்தலைவர், உபதலைவர், கிருவாகசபை உபதலைவர் என்பவர்களும், மேற்சபை (செனேற்)க்கான 15 பிரதிநிதிகளும் தெரியப்படுவர். அதன்பின் பிரதிநிதிகள்சபை தலைமை தாங்கப்படும். இதற்கிடையில் புதிய பிரதிநிதிகள் சபையில் யார் அதிகமான அங்கத்தவர்களின் ஆதரவைப் பெறுவர் எனத் தேசாதிபதிக்குத் தோற்றுகிறதோ, அவரைக்கொண்டு மந்திரிகள் தெரிவுசெய்யப்படுவர்.

புதிய கல்வித்திட்டம்

சென்னையக்கா சதி செய்கிறார்?

"மிஸ்ரர் சென்னையக்கா தம்மை இலங்கைப் பௌத்தர்களின் தலைவர் என்று சொல்லிக்கொண்டு திரிகிறார் சரித்திரப் பிரசித்திவாய்ந்த, புனிதமான சாஞ்சி அஸ்திகளின் பெட்டியை அன்று தலைமேற் சுமந்து சென்றார். ஆனால் அதே மிஸ்ரர் சென்னையக்கா, கத்தோலிக்கரின் அதி மேற்றிராணியாரான டக்ளர் ஜே. எம். மேஸனுக்கு ஓர் உத்தரவாதம் அளித்திருக்கிறார். புதிய கல்வித்திட்டம் அரசாங்கசபையில் விவாதித்து முடிவுசெய்யப்படமாட்டாது என்பதே அந்த உத்தரவாதம். கத்தோலிக்கரின் ஆதரவைப் பெறுவதற்காக, இந்தப் பௌத்த தலைவர் இன்று இப்படியான கும்மாளம் போடுகிறார்."

இவ்வாறு சென்றவாரத்திறுதியில் பயாகலையில், புதிய கல்வித்திட்டத்துக்காதரவளிப்பதற்காக நிகழ்ந்த ஓர் கூட்டத்தில் மிஸ்ரர் ஏ. மிவனபால என்பவர் கூறினர்,

கல்வி மந்திரி கன்னங்கராவினால் எடுத்தாளப்படவிருக்கும் இப் புதிய கல்வித்திட்டத்தால் நாட்டுக்குப் பல நன்மைகள் விழையும் என்றும அதனை எதிர்ப்பவர்கள் தேசத்துரோகிகள் என்றும், அதனை எதிர்ப்பவர்களுக்கு அடுத்த தேர்தலிற் பௌத்தர்கள் ஆதரவளிக்கவொண்ணாது என்றும் மிஸ்ரர் மிவனபால தொடர்ந்து பேசினர்.

மே மாதம் 13ம் திகதி புதிய கல்வித்திட்டம் சம்பந்தமான விவாதம் அரசாங்கசபையில் நிகழும்போது, 50,000 பேர் அரசாங்கசபைக் கட்டிடத்தை "முற்றுகையிட்டு, கல்வித்திட்டத்துக்காதரவாக ஆர்ப்பாட்டம் செய்ய ஆயத்தமாயிருக்கின்றனர் என்று மிஸ்ரர் பிற்றர் சில்வா என்பவர் தெரிவித்தார்.

மே மாதம் 13ம் திகதி நிகழவிருக்கும் அரசாங்கசபைக் கூட்டத்துக்கு அரசாங்கசபை யங்கத்தவர்கள் மூலமாக அறுமதிச்சீட்டுப் பெற்றவர்களே அரசாங்கசபைக் கட்டிடத்துக்குள் அநுமதிக்கப்படுவர் என்று அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ராணினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னேமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஸ்ரீ சித்திரைமீ உசு உ வெள்ளிக்கிழமை

"சைவசமயத்தை வளர்க்க விரும்பல்"

II

சைவசமயத்தை வளர்த்த பெரியார்களனைவரும் சிவபத்தியிற் சிறந்தவராய் அடியார் வணக்க மூடையவராய்க் குரு உபதேசம் பெற்றவராய், சமயத்தை வளர்க்கப் புகுந்த விடத்தில், தமக்கு ஏதும் ஆபத்து வருமே யென்ற அச்சம் எள்ளளவும் இல்லாதவராய், தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவராய், ஆபத்து வந்தவிடத்தும் தம்முயிரைத் திரணம்போல் மதித்து விடும் வைராக்கியம் பூண்டவராய் விளங்கினர்; மேலும் இப் பெரியாருட் பெரும்பாலார் இல்லற வாழ்க்கையிற் புகாது துறவற நெறியிற் புகுந்த புண்ணியராவர்; தங்கள் சமய ஒழுக்கத்தின் அவதாரமெனப் போற்றத் தக்கவர்; இவர்கள் இறைவனுடைய திருவருட் சம்மதத்தைப் பெற்றே பரமதகண்டனமும் சுயமத தாபனமுஞ் செய்யப்புகுந்த தீரராவர். அன்றியும் இப்பெரியார்கள் தம் சமயத்தை அநுட்டித்தவர்களைப் பிற சமயத்திலே புகுத வொட்டாது தடுத்தலே புண்ணியமென்ற நியதி பூண்டவர்களே யொழிய, இக்காலத்துள்ள அந்நிய சமயவாதிகள் போல, மற்றைச் சமயத்தவர்களைத் தம் சமயத்திற்குப் பொன்னாசை காட்டிப் பெண்ணாசை காட்டி, மண்ணாசைகாட்டி, இல்லாலேயேல் பலாத்காரமாக இழுக்க வேண்டுமென்ற இழிந்த செயல் பூண்டவரல்லர்.

எங்கள் சமயகுரவருட் பரசமய கண்டனஞ் செய்து சைவசமயத்தை யோங்கச் செய்த பெரியார் ஆளுடைய பிள்ளையாரெனப் போற்றப்படும் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், மாணிக்கவாசக சுவாமிகளெனப் பாராட்டப்படும் திருவாதவூரடிகளுமாவர்; திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அக்காலத்திலே தமிழ் நாடெங்கும் பரந்து சைவத்தையொதுக்கிய சமண சமயத்தையும் அதனைப் பரவச் செய்த சமணரையும் வலிகெடச் செய்தருளினர்; ஆளுடைய பிள்ளையாராகிய இந்நாயனாரைச் சிவகுமாரனெனச் சேக்கிழார் சுவாமிகள் கொள்ளுகின்றார், முருகக் கடவுளின் அவதாரமாக வுள்ளவரெனக் கந்தரனுபூதி பெற்ற செல்வராகிய அருணகிரியார் பாடியுள்ளார்; ஆனமையின், எங்கள் ஆளுடைய பிள்ளையார் தேவாமிசமாயுள்ளவ ரென்பது துணியப்படும். மேலும் சமணரோடு தாம் சமயவாதஞ் செய்யத் தொடங்கும் போது, பரமசிவனை வேண்டி அப்பெருமானுடைய பூரண அருளைப் பெற்றுக் கொண்டே சமயவாதஞ் செய்து வென்றருளினரென்று பெரிய புராணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது; எனவே சம்பந்தப் பிள்ளையார் மகா துறவியர்க்கும் மேலானவ ரென்பதும், பரமசிவனை வழிபட்டு அப்பெருமானுடைய திருவருளை மூன்னிட்டு அந்தப் பெருமானுடைய அநுக்கிரகத்தைப்பெற்றே பரமத கண்டனமும் சுயமதஸ்தாபனமும் செய்தருளினரென்பதும், சைவ சமயத்தை வளர்க்க விரும்புவோர் இயன்ற வரையில் மேலே சொல்லப்பட்ட கொள்கைகள் பூண்டவர்களா யிருத்தல் வேண்டு மென்பதும் பெறப்படலாயின.

இனி, மாணிக்கவாசக சுவாமிகள் ஈழநாட்டிலிருந்து சிதம்பரதலத்தை யடைந்தவர்களாகிய பௌத்த குருமார் பௌத்த அரசனென்னு மிவர்களோடு சமயவாதஞ் செய்ததும், அவர்களைப் பின்னர்ச் சைவ மார்க்கத்தில் ஒழுகச் செய்ததும் பொன்னம் பலவாணர் ஆஞ்ஞைப் பாடியாமெனத் திருவாதவூரடிகள் புராணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. மாணிக்கவாசக சுவாமிகள் மகா துறவியென்பது சொல்லாமலே யமையும். இடைக்காலத்தில் விளங்கிய சங்கராச்சாரியரும் இராமானுஜாச்சாரியரும், தங்கள் காலத்தில் இந்தியாவிலே பரந்த அருக சமயத்தையும் பௌத்த மார்க்கத்தையும் தங்கள் பிரசாரணங்களாலும் தாங்கள் எழுதிய அரிய நூல்களாலும் நிராகரித் தொதுக்கி, முறையே சைவத்தையும் வைஷ்ணவத்தையும் ஓங்கச் செய்தார்களெனச் சொல்லப்பட்டிருக்கின்றது, இவ்விரு பெரியாரும் துறவற மார்க்கத்தையே அநுசரித்தவர்கள்; அறிவிற் சிறந்தவர்;பலரைத் தங்கள் சீடர்களாகக் கொண்டவர்கள்.

பிற்காலத்தில், மேனாட்டுக் கிறிஸ்துவ பாதிரிமார் இங்கு வந்து குடிகொண்டு இங்குள்ள சைவமக்களுட் பலரைக் கிறிஸ்துவராக்குவதற்கு முயற்சி செய்தபோது, அவர்களை அங்ஙனஞ் செய்யவொட்டாது தடுத்தற்காக ஆற்றிய முயற்சிகள் பல வென்பது வெளிப்படை; அந்த நாளில் ஆறுமுக நாவலரவர்கள் பிறந்திலரேல், இந்த யாழ்ப்பாண நாட்டிலே யுள்ள சைவமக்களில் நூற்றுக்கு ஐம்பது விகிதமானோர் இப்பொழுது கிறீஸ்து மதத்தை யநுசரிப்பவராகக் காணப்படுவ ரெனக் கூறுதல் மிகையாகாது. நாவலரவர்கள் சைவத்தையும் செந்தமிழையும் வளர்க்கச் செய்த முயற்சிகள் இன்றுஞ் சைவசமய மக்களுடைய ஞாபகத்தி லுள்ளன; இப்பொழுது சைவ சமயத்தை வளர்ப்பவரென்று யாருமிருப்பரேல், அவர்களும் நாவலரவர்கள் அடிச்சுவட்டை ஒரு அளவிற்குப் பின்பற்றி முயற்சி செய்பவர்களே யாவர்; இந்த நாவலப் பெரியார் தாம் இல்லறத்திற் புகாது பிரமசாரியாக வாழ்ந்து வருதற்குக் காரணம், இல்லற நெறியிலிருந்து சைவத்தையும் செந்தமிழையும் வளர்த்தல் இயலாதெனவும், அவற்றை வளர்த்தற்குரிய அறநெறி துறவற நெறியேயாகுமென்னும் அக்காலத்திலே தாம் செய்த பிரசங்கமொன்றிற் கூறியுள்ளார்; இப்பெரியாரும் சமய பரிபாலனஞ் செய்யுந் தொண்டில் தம்முடைய ஆருயிரைத் தாரும்பாகமதித்து ஒழுகியவரா வர்.

ஐக்கிய முறையில் பஸ் சேவை

சங்க மூலமாக நடத்தத் தீர்மானம்

யாழ்ப்பாணத்தில் சென்ற 10 தினங்களுக்கு மேலாக வேலை நிறுத்தம் செய்துவரும் பஸ்தொழிலாளர் இன்னும் வேலைக்கு மீளவில்லை. பருத்தித்துறை—யாழ்ப்பாணம் போக்குவரத்துச்செய்யும் பஸ்களைவிட ஏனைய பஸ்களின் சஞ்சாரம் முற்றுக நின்றுவிட்டது, பருத்தித்துறை பஸ்கம்பெனியார் பொலிஸ் காவலுடன் தம் பஸ்களைச் செலுத்தி வருகின்றனர். இந்த நிலைமையில் ஊரவர் படுங் கஷ்டங்கள் கொஞ்சமல்ல. இப்போது இங்கே அதுட்டானத்திலிருக்கும் பஸ் போக்குவரத்து முறை முற்றுகீக்கப்பட்டுவிடல் வேண்டும்: ஐக்கிய முறையில் — தொழிலாளி முதலாளி என்ற பேதமில்லாமல், எல்லார்க்கும் சம உரிமை, சம அந்தஸ்து வழங்கும் ஓர்முறையில்—பஸ் பிரயாணம் வகுக்கப்படல் வேண்டும் என்ற ஓர் அபிப்பிராயம் பலமாக உருப்பெறறு வருகிறது. இதன் பயனாக நேற்று (வியாழன்) யாழ்ப்பாண மத்தியகல்லூரி மண்டபத்தில், யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமுள்ள பிரதிநிதிகளடங்கிய ஓர் பெரிய கூட்டம் நிகழ்ந்தது. வட இலங்கை ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர் திரு. வீ. வீரசிங்கம் பீ. ஏ. தலைமை வகித்தார். மேற்பார்வைச்சபைக்காரியதரிசியும்வழக்கறிஞருமான ஸ்ரீ அ. அருளம்பலம் காரியதரிசியாகக் கூட்டத்தை நடத்தினார்.

தலைவர் தமது முகவுரையில், இப்போது யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்துவரும் பஸ்தொழிலாளர் வேலைநிறுத்தத்தைப்பற்றியும், அதனால் பொதுஜனங்கள் படும் கஷ்டங்களையும் எடுத்து விளக்கி, இந்த நிலைமை இனியும் இருக்கவிடமுடியாது என்றும் கூறினார்; இந்தநிலையை மாற்றுதற்கு வழி என்ன? இப்போதுள்ள முதலாளிகள் தொழிலாளிகட்கிடையே ஓர் சமரசத்தை ஏற்படுத்திவிட்டால், நிலைமை திருந்திவிடுமா? இவர்களுக்கிடையே மீண்டும் மீண்டும் பிணக்கும், அதன் பயனாக வேலைநிறுத்தங்களும் நிகழாவென்பதற்கு என்ன உத்தரவாதம்? இந்தக் கேவலநிலையை அகற்ற ஒரே யொரு மார்க்கம் ஐக்கிய முறையில் பஸ் போக்குவரத்தை அமைப்பதேயாகும். தொழிலாளிமுதலாளி என்ற பேதம் அகன்று, எல்லாரும் சமத்துவ பங்காளராகிவிடுவர். தொழிலாளி 'இது என் சொந்த விஷயம்' என்று பிணக்குறமாட்டார் என்று ஸ்ரீ வீரசிங்கம் விரித்துரைத்தார்.

பஸ்போக்குவரத்துக்கான ஓர் ஐக்கிய சங்கத்தை எப்படி அமைக்கலாம் என்பதைப்பற்றி வடபகுதி ஐக்கிய சங்கப் பதிவு காரியஸ்தர் ஸ்ரீ எப். எக்ஸ். சந்திரசேகரா விளக்கினர்.

இதன்பின், பஸ் போக்குவரத்துக்கான ஐக்கிய சங்கம் அமைக்க அரசாங்கம் அநுமதியளிக்கவேண்டும் என்று ஸ்ரீ V. R. முருகேசு ஓர் தீர்மானத்தை எடுத்தார, ஸ்ரீ R. சிவபாதசுந்தரம் (வழக்கறிஞர்) அதனை வழிமொழிந்தார்.

தீர்மானத்தைச் சபையிலிருந்த ஒருவர் எதிர்த்துப் பேசினார். ஐக்கிய முறையில் பஸ்போக்குவரத்தைவிடாமல், அரசாங்கமே அதனை எடுத்து நடத்தவேண்டும் என்று அவர் கோரினார். ஆனால், தீர்மானம் மிகப் பெரும்பான்மையினரின் ஆதரவுடன் நிறைவேறியது.

ஐக்கிய முறையில் மோட்டார் பஸ் போக்குவரத்து உடனே அமைக்கப்படவேண்டும் என்றும், அதற்கான நடைவடிக்கைகளை ஆற்ற ஓர் கிராமசபை தெரியப்படல் வேண்டுமெனவும் ஸ்ரீ வ. ரீ. வேதாரணம் ஓர் தீர்மானத்தை எடுத்தார அதுவும் நிறைவேறியது.

அத்தீர்மானத்தின்படி ஸ்ரீ V. R. முருகேசுவைக் காரியதரிசியாகக் கொண்ட ஓர் கிராமசபை தெரிந்தெடுக்கப்பட்டது.

உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—14)

"தாயைப்போலப் பிள்ளை நூலைப்போல சீலை"

சிவகாமியம்மை சொன்னவற்றையெல்லாம் தாயும் மகளும் பரிவுடன் கேட்டுக்கொண்டிருந்தார்கள்; "ஆச்சி நீங்கள் எங்களுடன் மலாய்நாட்டிற்குப் புறப்படுவதானால் சொல்லுகிறேனென்று குறைவெண்ணாதீர்கள்; எங்கள் செலவிலேயே உங்களிருவரையும் நாங்கள் அழைத்துக்கொண்டு போவோம்; உங்களைப்போன்றதாயை எங்களுக்குக் கிட்டுமா? உங்கள் மகளின் விருப்பத்திற்கு நீங்களும்உடம்பட்டுப் புறப்படுங்கள்; அங்கே எங்கள் அண்ணனும், இன்னும் எங்கள் சொந்தக்காரர் இருக்கிறார்கள்; அவர்கள் மூலமாக நீங்கள் சொல்லுகிற பள்ளிக்கூடத்திலே உங்கள் மகளை ஒரு ஆசிரியையாக நியமித்தற்கான ஒழுங்குகளைச் செய்கிறோம்; நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம்; உங்கள் மகள் எனக்கு அக்காளோ, தங்கைச்சியோ, வயசு எவ்வளவென்று எனக்குத் தெரியாது; இப்பொழுது உங்கள் மகளை நான் நேரிற் கண்டால், மலாய்நாட்டிற்கு எங்களுடன் வரும்படிதான் புத்தி சொல்லுவேன்" என்று சிவபாக்கியம் மிகவும் மகிழ்ச்சியோடு சொன்னாள். "தங்கைச்சி, என் பிள்ளைக்கு இப்பொழுது பதினாறு வயசு நடக்கிறது. உம்மைப்போன்ற நிறமும் தோற்றமும்தான் அவளும்; ஆனால் உம்மிடத்திலுள்ள பெருங் குணம் என் பிள்ளையிடத்திலுண்டோ என்பதுதான் சந்தேகம்; நீங்கள் அவளைக் காணவேண்டுமென்று ஆசைப்பட்டுக் கவலைப்படவேண்டாம்; எப்படியோ இன்னுஞ் சிலவேளையில் அவள் உங்களைச்சந்திக்கவேண்டிவரும்" என்று சிவகாமியம்மை சொல்லிமுடிப்பதற்கிடையில், "ஆச்சி, என் குணத்தை மேலாகச் சொல்லாதீர்கள்; என் குணத்தைக் காட்டிலும், எங்கள் தங்கைச்சியின் குணம் மேலானதென்று நிசமாகச் சொல்லுவேன்; 'தாயைப் போலப்பிள்ளை நூலைப்போலச்சீலை' என்றல்லவா உலகத்திலே சொல்லுவார்கள்: உங்களுடைய நல்ல குணத்தையும் இனிய வாக்கையும் இதமான நடையையும் இங்கு நீங்கள் வந்திருந்த இந்தக் கொஞ்ச நேரத்திலே

தொடர்ச்சி 5-ம பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

பாகிஸ்தான் பாலைவனம்!

காந்திஜி - ஜின்னு சந்திப்பு

பாகிஸ்தான் பாலைவனம்

எப்படியோ பாகிஸ்தான்-அது தலையில்லா முண்டம்போலானாலும்-முஸ்லீம்களுக்கு வழங்கப்படப்போகிறது. இதுவரை, வங்காளம், பாஞ்சாலம், ஸிந்து முதலாம் முஸ்லிம் மாகாணங்களில் வங்கிகள், கைத்தொழில் நிலையங்கள் முதலாம் பொருள்வருவாய்க்கான சாதனங்கள் அநேகமாக ஹிந்துக்கள் பொறுப்பிலேயே இருந்துவருகின்றன. ஆனால் இனி நடக்கும் பிரிவினையை எதிர்பார்த்து, ஹிந்து முதலாளிகள் தங்கள் சொத்துக்களை, பாக்கிஸ்தானிற் சேரக்கூடிய தேசங்களிலிருந்து அகற்றுகிறார்கள். பாஞ்சாலத்திலிருந்து மாத்திரம் அகற்றப்படும் அசைவுள்ள சொத்துக்களின் பெறுமதி 250 கோடி ரூபாய்வரை இருக்குமென ஓர் பத்திரிகை மதிப்பிடுகிறது. இவ்விஷயமாக ஓர் ஹிந்து முதலாளி பின்வருமாறுகூறினாராம் நாங்கள் "மேற்குப்பாஞ்சாலத்தைவிட்டுப் போனபின் அங்கே நடப்பது அநர்த்தம்தான். நாங்கள்போனபின் பாகிஸ்தான் பொருளாதார விஷயமாக ஓர் பாலைவனம் மாதிரியாகிவிடும்" 150 கோடி ரூபா மூலதனமாகக் கொண்டுள்ள பிரபல வங்கிகளும் பல வீமாக்கம் பனிகளும் ல கூரில உள்ள தங்கள் தலைமைக்காரியாலயத்தை டெல்கிக்கு மாற்ற உத்தேசித்திருக்கின்றன.

●

காந்திஜீ—ஜின்னு சந்திப்பு

சென்ற செவ்வாய்க்கிழமை மகாத்மா காந்தியும், ஜனுப் ஜின்னுவும் ஒருவரை ஒருவர் சந்தித்துச் சம்பாஷித்தனர். தாம் இருவரும் சேர்ந்து வெளியிட்டுள்ள சமாதான அறிக்கை விஷயமாகவும், இப்போதைய அரசியல் நிலைமை சம்பந்தமாகவும் இருவரும் சம்பாஷித்தனர் என்று தெரிகிறது வகுப்பு ஒற்றுமைக்காக இருவரும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கை பயன்தரவில்லை என்பதைக் காந்திஜீ, ஜின்னுவுக்கு எடுத்துக்காட்டினுர். அடுத்ததாக இந்தியாவை பாகிஸ்தான், ஹிந்துஸ்தான் என்று இரண்டு பாகங்களாகத் துண்டாடுவது பற்றியும் பேசினர் முதல் விஷயமாக, அதாவது சமாதானவேண்டுகாளின் பின்னரும் வகுப்புக் கலகங்கள் ஓயவில்லை என்பதை ஜின்னு ஒத்துக்கொண்டு அதுபற்றி மீண்டும் முயற்சி செய்வதாகத் தெரிவித்தாராம். இந்தியாவை இருதுண்டுகளாகப் பிரிப்பதால் நன்மை வந்துவிடாது என்ற தமது கொள்கையைக் காந்திஜி ஜின்னுவுக்கு மீண்டும் வற்புறுத்தினுராம். இத்தலைவர்கள் இருவரும் மீண்டும் சந்திப்பரோ என்பது இப்போது சொல்லமுடியாத விஷயம்.

●

வெருட்டுகிருர்கள்

வங்காளத்தில் உள்ள பல பிரபல ஹிந்துத்தலைவர்களுக்கு இப்போது சில நாட்களாக அநாமதேயம் பயமுறுத்தற் கடிதங்கள் வருகின்றன. "வங்காளத்தைப் பிரித்து, மேற்குப் பாகத்தை ஹிந்துக்களுக்கும். கிழக்குப்பாகத்தை முஸ்லிம்களுக்கும் பங்கிடவேண்டுமென்ற கிளர்ச்சியை இனியும் தொடர்ந்து செய்வதானுல் உம்மைப் போபத்துச் சூழும்" என்னும் இன்னோரன்னவார்த்தைகள் அக்கடிதங்களிற் பொறிக்கப்பட்டிருக்கின்றனவாம். இதனைச்செய்வது சில பயங்கொள்ளி லீக்கர்கள் என்று கருதப்படுகிறது.

●

காங்கிரஸ் காரிய நிர்வாகசபை

காங்கிரஸ் காரியநிருவாகசபை சென்ற ஞாயிற்றுக்கிழமை கலைந்துவிட்டது. அது இனி எப்போது கூடும் என்பதை இப்போது திடமாகச் சொல்வதற்கில்லை ஆனுல் மே மாதம் மூன்றும்வாரத் திறுதியில் அது மீண்டும் கூடலாம் என்று யூகிக்கப்படுகிறது. இப்போது, இராஜப்பிரதிநிதியின் அறிக்கையுடன் லண்டன் சென்றுள்ள இஸ்மேபிரபு, இன்னும் 10 தினங்களில், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கடைசிமுடிவுடன் இந்தியாவுக்கு மீளக்கூடும். அப்போது நிலைமையை ஆராய்ந்து ஓர் முடிவு செய்யக் காங்கிரஸ் காரியநிருவாகதுபையல்ல, காங்கிரஸ் பாராளுமன்றம் எனப்படும் நிருவாகசபையே கூட்டப்படலாம் என்று அரசியல்வாதிகள் பேசிக்கொள்ளுகின்றனர்.

●

நடக்கப்போவது என்ன?

இஸ்மேபிரபு, லண்டனுக்குப் போய்விட்டார். இராஜப்பிரதிநிதி மவுன்ற்பேற்றன் சிம்லாவிற்குச் சென்றுவிட்டார். இஸ்மேபிரபு லண்டனில் இருந்து மீளும்வரை, இந்திய அரசியல் நிலைமையில் எவ்வித மாற்றமும் நிகழமாட்டாது என்றும் அவர் மீண்டபின்னரே, பல சிக்கலான பிரச்சினைகள் விஷயமாக முடிவுகள் செய்யப்படும் என்றும் தெரிகிறது. பாஞ்சால, வங்காளப்பிரிவினை; எல்லைப்புறத்தில் லீக்கர் கேள்விப்படி இப்போதுள்ள மந்திரசபையைக் கலைத்துவிடுதல், பாகிஸ்தான், ஹிந்துஸ்தான் என்னும் இருபாகங்களுக்குமான அரசியலை நிர்ணயித்தல், எனனும் இன்னோரன்ன விஷயங்கள் இஸ்மேபிரபு வந்தபின்தான் தெளிவாகும். இஸ்மேபிரபு வந்தவுடன், இராஜப்பிரபு, காங்கிரஸ்—லீக் தலைவர்களையும் சீக்கியத் தலைவர்களையும் அழைத்துத் தாம் கடைசியாகச் செய்யப்போவதை அவர்களுக்குத் தெரிவிப்பார்.

●

தேசாதிபதி நீக்கப்படுவரா?

எல்லைப்புறமாகாணத்தில் லீக்கர் செய்யும் கலவரங்களுக்கெல்லாம் ஆதாரவளிப்பவர் அம்மாகாணத் தேசாதிபதி ஸேர் ஓலாம்கரோஎன்பவரே என்பது பகிரங்க இரகசியம். அவர் அங்கே தேசாதிபதியாக இருக்கும்வரை சமாதானத்தை நிலைநாட்டுவது துர்லபம் என்று எல்லைப்புறப் பிரதமர் கான்சாகிப் அடிக்கடி தெரிவித்து வந்திருக்கிறார். லீக்கரின் கேள்விப்படி காங்கிரஸ் மந்திரசபையைக் கவிழ்த்து அங்கே லீக் மந்திரசபையை ஏற்படுத்தவேண்டும் என்ற கெட்ட நோக்கம்கொண்ட இத்தேசாதிபதியின் செய்கையனைத்தையும் காங்கிரஸ தலைவர்கள் அம்பலத்தில் இழுத்துவிட்டனர் இராஜப்பிரதிநிதியும் மெல்ல மெல்லவாக நிலைமையின் உண்மைத்தன்மையினை உணர்ந்து வருகிறார் என்றும், கூடிய சீக்கிரம், தேசாதிபதியைப் பதவியினின்றும் நீக்கி, ஓர் இந்தியரையே அங்கே தேசாதிபதியாக அனுப்புவார் என்றும் இப்போது சில நாட்களாகப் புதுடெல்கியிற் கூறப்படுகிறது.

●

வட்டமேசை மகாநாடு

இஸ்மே பிரபு இங்கிலாந்திலிருந்து வந்ததும், காங்கிரஸ்—லீக்—சீக்கியத்தலைவர்களைக்கொண்ட ஓர் வட்டமேசை மகாநாட்டைக் கூட்ட இராஜப்பிரதிநிதி மவுன்ற்பேற்றன்பிரபு நிச்சயித்திருப்பதாக லாகூர்ப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது. இந்த மகாநாட்டுக்கான அழைப்புப்பத்திரங்களையும் இராஜப்பிரதிநிதி அனுப்பிவிட்டார் என்று ஷ பத்திரிகை மேலும் கூறுகிறது.

அளவெட்டியில் மாணவர் சங்கம்

இம்மாதம் 3-ந்தேதி சனிக்கிழமையிரவு 7 மணியளவில் அளவெட்டி மாணவர்சங்கத்தாரின் விசேஷ பகிரங்கக் கூட்டமொன்று அளவெட்டி வாசிகசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. ஆ. விஜயரத்தினமவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று. S. விஜயரத்தினமவர்கள் வரவேற்புப்பாக்கள் பாடினுர். தலைமையுரையின்பின் திரு சி. சிவபாதசுந்தரமவர்கள் M. A. (Cantab) 'ஆசிரியர் கடமை' என்னும் விஷயம்பற்றிப் பேசினுர். திரு. N. S. சேதுகாவலர் அவர்கள் B. A. (Hons) கல்வி என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினுர் பண்டிதர் திரு. க. நாகலிங்கமவர்கள் 'ஆசிரியரும் மாணவரும்' என்னும் பீடிகைகொண்ட பொருளுரை நிகழ்த்தினர், திரு. T. மாணிக்கவாசகர் அவர்கள் B. A: 'மாணவர் கடமை' என்பது பொருளாக விரிவுரை நிகழ்த்தினர், திரு. A. மார்க்கண்டன் அவர்கள் B. A. B. Sc.; 'கிராமப் புனருத்தாரணம்' என்னும் விஷயம் பற்றி ஓர் பிரசங்கம் செய்தனர். காரியதரிசி கோ இரத்தினசாமி நன்றி கூறியதோடு பகிரங்கக்கூட்டம் பூர்த்தியாயிற்று. அதன்மேல் 11 மணியளவில் மாணவர் பொதுக்கூட்டம் தலைவர் A. விஜயரத்தினம்அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று அப்போது நிர்வாகசபையினரால் தயாரிக்கப்பட்ட சங்க நடைமுறைப் பிரமாணங்கள் ஏகமனதாக அங்கீகாரம் பெற்றன பின்னர் அண்மையில் அரசாங்கசபையில் இடம் பெறவிருக்கும் கல்விச் சட்டத்தைப் பூரணமாகஆதரிப்பதாய்க் கொண்டுவந்த ஓர் தீர்மானமும் ஏகமனதாய் நிறைவேறிற்று. இத்தீர்மானமபற்றிய செய்தியைக் கனம் கல்வி மந்திரியாரவர்களுக்கு அறிவிப்பதாக முடிவு செய்யப்பட்டபின் அன்றைய நிகழ்ச்சிகள் பூர்த்தியாயின.

—கடித

மிஸ்ரர் செனநாயக்காவின் மறுப்பு

தாம் கத்தோலிக்கரின அதிமேற்றிராணியாருடன் சேர்ந்து சதியாலோசனை செய்து, புதிய கல்வித் திட்டத்துக்கு விரோதமாக நிற்பதாகக் கூறும் செய்திகள் அனைத்தும் பொய்யென்றும், தான் இது விஷயமாகக் குறித்த மேற்றிராணியாரைக் கண்டு சம்பாஷிக்கவில்லை என்றும் மிஸரர் செனநாயக்கா ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

செய்தித் திரட்டு

இந்தியாவில் சீன அரசாங்கத்தின் இராஜரீகத் தூதராக நியமிக்கப்பட் டிருக்கும் மிஸ்ரர் லோசியர லியூன் சென்ற 3-4-47 இந்தியா வந்து சேர்ந்தார்.

* *

காஸ்மீர சமஸ்தானத்தில் பிரதம மந்திரியாக விருந்த சேர் கைலாசஹக்ஸார் இப்போது இலங்கைக்கு விஜயஞ் செய்திருக்கிறர். அவர் சிலநாட்கள் இலங்கையில் தங்கிநின்று மே மாதம் 19-ந் திகதி தாய்நாட்டுக்கு மீளுவார்.

* *

சென்றவாரம் கூடவிருந்த முல்லைத்தீவுப்பட்டினசபை, போதிய அங்கத்தவர்கள் சமுகமளிக்காதபடியால் தவணையிடப்பட்டது. இப்படியாக அங்கத்தவர்கள் இன்மையால் இச்சங்கக் கூட்டம் தவணையிடப்பட்டது. இது நாலாம் முறையாதும்

* *

இந்தோசீனச் சுதந்திர வாதிகளுக்கும், பிரான்சீய அரசாங்கத்துற்கு மிடையே கூடியசீக்கிரம் ஓர் சமரசம் ஏற்படுதற்கான அறிகுறிகள் தேன்படுகின்றன என்று ராய்ட்டர்செய்திஸ்தாபனம்தெரிவிக்கிறது

* *

இத்தாலியில் ஹிட்லரின் பிரதம சேனுதிபதியாகவிருந்த கேஸல்றிங். இத்தலியஊரவர்களைச் சென்ற 1944-ம் ஆண்டு சுட்டுக் கோன்றர் என்ற குற்றத்தின் பேரில் பிரிட்டிஷ் இராணுவ நீதிஸ்தலம் ஒன்றல் மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

* *

தண்டகழவைவி லிருந்து 13 மைல் தூரத்திலுள்ள பாண்டுவஸ நுவரவில் புராதன அரண்மனை ஒன்றின் பாழடைந்த சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட் டிருக்கின்றன. இது இலங்கையின் இரண்டாவது மன்னரான பாண்டுவாசாவின் அரண்மனையாக இருந்திருக்கவேண்டு மென்று யூகிக்கப்படுகிறது.

* *

கோலன்னுவையிலுள்ள "பெற்றேல்" மண்ணெண்ணெய்க் கம்பனிகளில் வேலை செய்யும் தொழிலாளர் சென்ற செவ்வாய்க்கிழமை தொடக்கம் வேலை நிறுத்தம் செய்துவருவதால் இலங்கையில் பெற்றேல் மண்ணெண்ணெய் என்னும் இவைகிடைப்பது அரிதாகிவிட்டது.

* *

ஐரோப்பாக் கண்டத்தில் 250பௌத்த வித்தியாசாலைகள் இருக்கின்றன.

* *

இதுவரை 20 லட்சம் ஜனங்களுக்கு மேல், ஸாஞ்சி அஸ்திகளைக் கொழும்பு நூதனசாலையில் தரிசித்துவிட்டனராம்,

நிறத்திமிரை அடக்க

ஆசியமக்கள் ஒன்றுபட வேண்டும்

தென்னுபிரிக்காவிலே நிறத்திமிர் பிடித்த வெள்ளையர் இந்தியமக்களுக்குச் செய்துவரும் நீதியீனம், இந்தியாவுக்கு மாத்திரமல்ல, ஆசியமக்கள் அனைவருக்குமே அவமானம் விளைக்கத்தக்கதாகும். எனவே ஆசியாவில் உள்ள சகலமக்களும் அவர்களின் அரசாங்கங்களும் இவ்விஷயம் இந்தியாவைத்தான் பாதிக்கிறது என்று இருக்காமல், அது தங்களையும் தனித்தனி பாதிப்பதென்று எண்ணிக் கருமம் ஆற்றித் தம் சுயமரியாதையைக் காப்பாற்றவேண்டும்" என்று லண்டனில் தாகூர்ச்சங்கத்தை ஸ்தாபித்த ஸ்ரீஜுத் பீ பீ ராய் சௌத்ரி ஓர் அறிக்கை விட்டிருக்கிறார், அவர் மேலும் அவ்வறிக்கையிற் குறிப்பிடுவதாவது:

"ஹிட்லர், முசோலினி என்னும் அதிகாரவெறிபிடித்த சர்வாதிகாரிகள் அழிந்து ஒழிந்துபோனுலும்அவர்களுடையஆவிகள் இன்று தென்னுபிரிக்காவிலே சஞ்சாரம் செய்கின்றன. அங்கே ஸ்மட்ஸ் சேனுதிபதியும் சில வெள்ளையர் கூட்டமும் சர்வாதிகாரத் தர்பார் நடாத்துகின்றனர்.

"ஆசியாவில் உள்ள சகலமக்களும் ஸ்மட்ஸ் அரசாங்கத்தின் நிறத்திமிரை அடக்கவேண்டும் தென்னுபிரிக்க அரசாங்கத்துடன், ஆசியநாடுகள் எவ்வகையான இராஜரீகத் தொடர்பும் வைத்திருக்கக்கூடாது இந்த நீதியற்ற ஸ்மட்ஸ் அரசாங்கத்தின் அட்டூழியங்களை உலகெங்கும் நாம் அறிவிக்கவேண்டும்."

படுக்கையும் போசனமும்

பிரமஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள், சுதுமலை.

வடக்கே தலை வைத்துப் படுத்துக் கொள்ளக்கூடாதென்பதற்கும், போசன காலத்தில் ஒருவரோடும் பேசக்கூடாதென்பதற்கும் நியாயம்.

இராக்காலங்களில் பூமியைச்சுற்றி ஒருவிதமான மின்சாரசக்தி தெற்கிலிருந்து வடக்குநோக்கியோடுகிறதென்றும், அது எந்த இடத்தில் பிரவேசிக்கிறதோ, அந்த இடத்தில் நன்மையும் எந்தப் பக்கத்தை விடுகிறதோ அந்த இடத்தில் தீமையையும் செய்கிறதென்றும் வைத்திய சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதன் பிரகாரம் வடக்கே தலைவைத்துப் படுத்துக்கொண்டால் அந்த மின்சாரம் கால்வழியே பிரவேசித்துச் சிரசின்வழியே வெளிப்படுகின்றது. அப்போது கால்களுக்கு நன்மையையும் சிரசிற்குத் தீமையையுஞ் செய்கிறது. சிரசின் மேர்பாகத்தில் மூளையிருப்பதால் அதற்குத் தீமை செய்கிறது. அதனுல் சிரநோய் பித்தரோகம், சித்தப்பிரமை, பைத்தியம் முதலிய நோய்களுண்டாம் என்பதை யறிக.

போசனஞ் செய்யும்பொழுது ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தால் வாயின்கண் ஆகாரஞ் செல்வதற்குக் குழாயும் சத்தம் எழும்ப ஓர் குழாயும் உண்டு. ஆகாரஞ் செல்லுங் குழாய் மூடப்பெறுமலிருக்கும்; சப்தக் குழாயோ சப்தம் எழும்புஞ் சமயத்தைத்தவிர மற்ற நேரங்களில் மூடியிருக்கும் தன்மையது. இத்தகைய வாயில் ஆகாரத்தை மென்று உண்ணும்போது பேசிக்கொண்டிருந்தால் சப்தக் குழாயிலும் ஆகாரஞ் செல்வது அதிசயமல்ல. அக்குழாயில் மென்ற ஆகாரம் கொஞ்ச நேரத்தில் அதனை அநேகவித இடையூறுகளுங் காளாக்கிவிடுகின்றது. ஆகையினுல் போசனஞ் செய்யுங்கால் வேறு சிந்தனையின்றி போசனத்தின்மேல் வைத்த நாட்டத்தோடு போசனஞ் செய்யவேண்டும் என்பது ஆன்றோர் கொள்கை.

மகோத்ஸவம்

சுதுமலை சங்கேளப்பதியில் புராதனமாயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ புவனேசுவரியம்மாளுக்கு நிகழும் சர்வசித்து வருஷம் வைகாசி மாதம் 3 உ (17-5 47) சனிக்கிழமை துவஜாரோகணமாகி மகோர்சவம் நடைபெறும். மேற்படி மாசம் 19ந் திகதி (3.6-47 திங்கட்கிழமை ரதோற்சவமும் அடுத்த நாளாகிய செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

—கடித.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம்

ஜீ.ஜீ.யின்லண்டன்விஜயம்

ஐயா!

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள எனது கடிதத்தையும் அதற்கு தமிழ்க் காங்கிரஸ் காரியதரிசியா யிருந்த திரு. S. சிவசுப் பிரமணியம் அவர்கள் அனுப்பிய பதிலையும், பொதுசனங்கள் அறியும்பொருட்டு தங்களுடைய பத்திரிகையில் தயவுசெய்து பிரசுரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள
சு. நடேசன்

இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்: 2-5-47

***

எனது கடிதம்:

இராமநாதன் கல்லூரி
சுன்னாகம் 24-4-47

அன்புசான்ற திரு. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு:—

ஐயா!

இலங்கை அரசியல்திருத்தம்சம்பந்தமாக குடியேற்ற நாட்டு மந்திரியைக் கண்டு பேசும்பொருட்டு திரு G. G. பொன்னம்பலம் அவர்கள் திரு. இராச குலேந்திரம் அவர்களுடன் இங்கிலாந்துக்குச் செல்ல ஆயத்தஞ் செய்துகொண்டிருந்தபொழுது, தாங்களும் திரு. I X. பெரோ அவர்களும் என்னிடம் வந்து குடியேற்றநாட்டு மந்திரியைக் கண்டு பேச அதிகாரமளிக்கும் கடிதத்தில் கையொப்பமிடும்படி என்னைக் கேட்டதும், நான் கையொப்பமிட மறுத்ததும் தங்களுக்கு ஞாபக மிருக்கும்.

தமிழ்க் காங்கிரஸ் பிரசாரகர்கள், திரு. பொன்னம்பலம் அவர்களே இங்கிலாந்துக்கு அனுப்பியவருள யானும் ஒருவன் என்றும், ஆதலால் சோல்பெரித் திட்டத்திற்கு யான் வாக்களித்தமை தவறு என்றும் பிரசாரஞ் செய்கின்றனர். இதுவிஷயமாக எனது தொகுதியில் பலருடைய மனதில் ஏற்படக்கூடிய பிழையான அபிப்பிராயத்தை நீக்கும்பொருட்டு தங்களுடைய அதிகாரபூர்வமான வாக்குமூலம் ஒன்று அனுப்பிவைத்தால் பெரிதும் உதவியாக இருக்கும்

தங்கள் அன்புள்ள
(ஒப்பம்) சு. நடேசன்

***

திரு. S. சிவசுப்பிரமணியம் அவர்கள் அனுப்பிய பதில்:

156, ஹல்ஸ் டோவ்
கொழும்பு,
27-4-47

அன்புள்ள ஐயா!

தாங்கள் 24-4-47ல் எழுதிய கடிதங் கிடைத்தது சோல்பரி சபையாரது விசாரணை முடிந்தபின்பு அரசியல் திருத்தம் சம்பந்தமாக திரு G. G. பொன்னம்பலம் அவர்களே இங்கிலாந்துக்கு அனுப்பியவர்களில் தாங்களும் ஒருவர் என்ற பிழையான அபிப்பிராயம் சிலர் மனதில் ஏற்பட்டிருப்பின் அதை நீக்கும்பொருட்டு இக் கடிதத்தை மகிழ்ச்சியுடன் எழுதுகின்றேன். இது சம்பந்தமாக உண்மையைக் கூறவேண்டுவது நியாயமேயாகும். நான் அறிந்தவரையில் பின் வருவனவற்றைத் திட்டமாகவும் உண்மையாகவும் கூறுகின்றேன்:—

1. சோல்பரி அரசியல் திருத்தம் சம்பந்தமாக திரு. G G. பொன்னம்பலம் அவர்களே இங்கிலாந்துக்குப் போகும்படிகேட்டவர்களில் தாங்கள் ஒருவரல்லர்.
2. அதற்குப் பதிலாக சோல்பரி சபையினர் விசாரணை முடிந்தபிறகு தமிழ்மக்கள்சார்பாக இங்கிலாந்துக்குத் தூதுக்கோஷ்டி செல்வதற்கு மாறுகவே இருந்தீர்கள்.
3. சோல்பரி சபையாரது விசாரணை பூர்த்தியடைந்துவிட்டதாலும், அவர்கள் நமது வேண்டுகோளின்படி அனுப்பப்பட்டவர்களாதலாலும் அச்சபையாரது தீர்ப்பை ஏற்பதே முறையென்று அபிப்பிராயப்பட்டீர்கள்.
4. மேலும் சோல்பரி விசாரணைச்சபையாரது நியமனத்தைப் பிரித்தானிய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமாகையால், தமிழ்மக்கள்சார்பாக இங்கிலாந்துக்கு தூதுக்கோஷ்டி செல்வது வீணாகுமென்றும், அங்ஙனம் மேற்கொண்டு இதைப்பற்றி இங்கிலாந்தில் பிரயத்தனம் செய்வது, சிங்களமக்கள் தமிழ் மக்களுக்கிடையில் பிழையான விளக்கத்திற்கு ஏதுவாகுமென்றும் தாங்கள் அபிப்பிராயப்பட்டீர்கள்.
5. அன்றியும் நம்முடைய சார்பாகச்செல்லும் தூதுக்கோஷ்டியைக் கண்டு பேசவேண்டுமென்ற கோரிக்கையைக் குடியேற்ற நாட்டு மந்திரியவர்கள் முன்னரே மறுத்தமையை எனக்கு எடுத்துக்காட்டினீர்கள்,
6. இங்கிலையில் திரு. பொன்னம்பலம் அவர்களாவது வேறு ஒரு தமிழராவது அரசியல் திருத்தம் சம்பந்தமாக இங்கிலாந்துக்குப் போவதனால் நன்மை ஏற்படாதென்றும், ஒருவேளை தீமை விளையக்கூடுமென்றும், அபிப்பிராயப்பட்டமையால் கையெழுத்திட மறுத்தீர்கள்.
7. தமிழ்மக்களின் சார்பாக இங்கிலாந்துக்குத் தூதுக்கோஷ்டி ஒன்று அனுப்பவேண்டியது அவசியம் என நான் பலமுறை கூறில் வற்புறுத்தியபோதெல்லாம் மேற்காட்டிய காரணங்களைக் கூறினீர்கள். கடைசிமுறையாக நானும் இன்னொருவரும் கல்வி நிர்வாகசபை கூடும் அறையில் தங்களைச் சந்தித்து திரு. பொன்னம்பலத்துக்குப் பேட்டியளிக்கும்படி மந்திரியவர்கட்கு எழுதிய காகிதத்தில் கையொப்பமிடும்படி கேட்ட அப்பொழுதுங்கூட காரணங்களால் கையொப்பமிட மறுத்தீர்கள்.
8. இத்தவிஷயம் சம்பந்தப்பட்டமட்டில் எனக்கும் தங்களுக்கும் அபிப்பிராய பேதமிருந்ததும், இப்பொழுதும் அச்சமயம் தாங்கள் செய்த தீர்மானம்சரியல்லவென்பது எனது அபிப்பிராயமாயினும், யானறிந்த அளவில் உண்மையில் நிகழ்ந்தவற்றை அப்படியே கூறவேண்டுவது எனதுகடமையென உணர்கின்றேன்.

தங்கள் அன்புள்ள
(ஒப்பம்) S. சிவசுப்பிரமணியம்

வட்டு கிழக்கு ஐக்கியபண்டசாலை

ஐயா!

ஐக்கிய இயக்கம் என்பது பொதுசனங்களின் நன்மையை நோக்கி ஏற்பட்ட ஒரு இயக்கமாகும். இப்போது அதன் நோக்கம் மாறிவருகின்றது என யூகிக்கவேண்டியிருக்கிறது காரணம் பொதுஜனங்களின் பராமுகமும் கடாத்தும் அதிகாரிகளின் சுயநல விருப்பமுமேயாகும்

வட்டு கிழக்கு ஐக்கிய பண்டசாலையில் பலவகையான ஊழல்கள் இருக்கின்றன. பொதுசனங்களே நடாத்தும் முறையும் அவர்கள் பணத்தை உபயோகிக்கும் முறையும் மிகவும் ஒழுங்கீனமாக இருக்கின்றன. 5 ரூபா கொடுக்கும் வண்டிக்கூலிக்கு 6, 7 ரூபா கொடுக்கிறார்கள். தேவையில்லாது, ஒரு காவற்காரனைப் புடைவைக்குக் காவல வேண்டும் என்ற காரணங்காட்டி அதற்கும் வீண்செலவு செய்கிறார்கள். கடையில் இல்லாத சட்டுப்பாட்டுப் பொருள்களைக் கட்டுப்பாடில்லாத (Black Market) கள்ள விலைக்குப் பெற்று அதற்கோர் லாபமுஞ் சேர்த்து விற்றுவருகின்றார்கள்; இதன் கருத்து என்ன? இனி,

வங்கியிற் கட்டவேண்டிய பணம் அங்ஙனஞ் செய்யப்படாது, இடைநாட்களிலே முதலில்லா வியாபாரத்திற்கும் இடங்கொடுக்கின்றது. சென்ற ஆண்டுத் தலைவராயிருந்த காரியதரிசியாக இருக்கிறார். இவர் தலைவராயிருந்த நாளில் பணத்தை அடுத்த தலைவரிடம் ஒப்படைக்கும் விஷயத்தில் தாமதப்பட்டே பணத்தைக் கொடுத்தார் என்பது யாவருமறிந்த விஷயம். இவரே இப்போது காரியதரிசியாகவும் இருக்கிறார். இப்போதைய தலைவரும் காசை வங்கியில் ஒழுங்காகக் கட்டுகிறார் என்று எண்ணுவதற்கில்லை. இவர்களுக்கு முன்னிருந்த தலைவரி வங்கியிற் பணத்தைக் கட்டிவந்தார். ஆகவே பொதுஜனங்களுக்குத் தொண்டு செய்யும் இவர்கள் தங்கடமையை முறைப்படி செய்யாது, குறித்த நிருவாகசபையில் இருப்பதன் காரணமென்ன? ஆரம்ப காலந்தொட்டு [illegible]

பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்த்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருமுத்தல் விலை ரூபா 25
அரைமுத்தலுக்கு ரூபா 12-50
கால்முத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

வி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to , 1—4—48

ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சை

மேற்சொல்லிய பரீட்சைக்குரிய பிரவேச விண்ணப்பப் பத்திரங்கள 1947-ம் ஆண்டு மே மாதம் 31-ந் தேதிவரையும் ஏற்கப்படும். இத் திகதிக்குப் பிற்பாடு விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா.

இயன் சான்டிமன்,
வித்தியாதிபதி

கொழும்பு
1947-ம் ஆண்டு மே மாதம் 1-ந் திகதி
G 23 6—9-5-47

காணிவிற்பனவு விண்ணப்பப் பத்திரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட் பராபரிப்புத் தத்துவ வழக்கு கெ. 303-ல் எனக்குக் கிடைத்த உத்தரவுப்படி கீழ் ஆதன இடாப்பில் விபரிக்கப்படும் மாவிட்டபுரம் பராயமற்ற பிள்ளையாகிய இராசரட்டினம் சண்முகரட்டினத்தி னுதனம் வேண்டவிரும்புவோர் தங்கள் கேள்விப் பத்திரத்தை, இக் ப்பிரசுரத் தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களுக்குள் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட் சக்கடத்தார் அவர்கட்கு அல்லது வழக்கறிஞர் யாழ்ப்பாணம் சாப்பல்வீதி கெ 25 ல் இருக்கும் சரவணமுத்து நடராசா ஆகியோருக்குச் சேர்ப்பிக்கவும். அதிக உயர்ந்த கேள்விக்காரருக்கே காணி விற்கப்படும். தேன்வையெனக் கண்டால் ஷெ விற்பனவை நிற்பாட்டகோட்டுக்கு உரித்துண்டு.

ஆதன டாப்பு விபரம்

தெல்லிப்பழை மேற்கிலிருக்கும் "பலட்டியாவடை" என்னும் காணி பர. நில இலா. 38¾ம் இன்னும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு ஒழுங்கையும் சின்னத்தம்பி பெண் தங்கமாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு வயிரவிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளைக்கும் சகோதரர்கள் அம்பலவாணர்பெண் வள்ளிப்பிள்ளை பிழுதனம்.

சரவணமுத்துவும் நடராசாவும்
பெட்டிசகாரன் பிரக்டர்கள்
M 22 9—13-5-47

இல்லை தாங்கள் விருப்பப்படியே செய்துகொள்ளுகின்றோம்.

இவர்களைக்கண்டு குறைநிறைகளைப்பற்றிக் கேட்டால் "மக்களுக்காக இரவுபகல் ஓயாது உழைத்தக் களைத்துப்போனோம் இனி எங்களால் முடியாது. எங்கள் உத்தியோகத்தை விடப்போகிறோ"மென்கிறார்கள் ஆனால் விட்டவர்கள் யாரையும் இதுவரையிற் காணவில்லை.

இங்ஙனம்
ஒரு அங்கத்தவன்

கைதடி மேற்கு ஐக்கிய பண்டசாலை

மேற்படி பண்டசாலை மூலம் சென்ற வாரம் எமக்குக் கிடைத்த நற்சீரகத்தில் அரைவாசி குறுணற்கற்களாகவே காணப்படுகின்றன. இருத்தல் ஒன்றிற்கு விலை ரூபா 1—20 வீதம் ரூபா 2— 0 ஆகிறது. இதற்கு யார் பொறுப்பு, யாருக்கு முறையிடுவது.

இங்ஙனம்
ச. இ. சதாசிவன்

திருச்சி ரேடியோ

சனி மே 10

7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி பஞ்சாபகேசன் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 ஓ. பி. ஷண்முகம்செட்டி பாட்டு 8-30 காலை இசை 9 முடிவு.

1 டி. பஞ்சாபகேசன்வயலின் 1-30ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 குரல்வகை 2 தமிழில் செய்திகள் 2 05 என். ஆர். பி. ஐயர் பாட்டு 2-45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 என். ஆர். பி. ஐயர்பாட்டு 5-40 திருவிளையாடல் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஓ. பி. ஷண்முகம் செட்டி பாட்டு 7-15 ராணுவத்திலிருந்து திரும்புவோருக்கு வசதிகள் 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதராவில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-12 தூரக்கண்ணு நாகஸ்வரம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 கிளாரினெட் சாக்ஸபோன் 10 இசை வேளை 10-30 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு மே 11

7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஆர். சுப்பிரமணியம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி சௌடையா வயலின் 8 30 வி. கமலா பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் 12-30 கஞ்சி வாதப்பா 12 40 காலைவழியே 12-45 தக்தைசொல் மந்திரம் 13-55 சுவாத்தன்மாலை 1 மணி மலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மருங்காபுரி கோபாலகிருஷ்ண ஐயர் வயலின் 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை 3 ஒலிமலர் முடிவு.

மாலை 5 மதுரை காமு அம்மாள் வீணை 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 540 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி. கமலா பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்பெட்டி 8 மதுரை காமு அம்மாள் வீணை 8-30 ஆர் சுப்பிரமணியம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குழலிசை 9-20 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 டி எஸ். வெங்கடாசலம்பிள்ளை வயலின் 10 இசைவேளை 10-30 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் மே 12

7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 சூர்யஞர் கோயில் கே. நாராயணசாமிபிள்ளை நாகஸ்வரம் 3 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8-30 கே வி. சுப்பிரமணியம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 கே விஜயராகவலுநாயடு பாட்டு 2-15 கோடைக்கல்வி 2-45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 சூர்யனூர்கோயில் கே நாராயணசாமிபிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 0 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 கே. என். ராஜம், கே என். கமலம் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7.45 பெண்களுக்கு 8-05 கே, வி. சுப்பிரமணியம் பாட்டு 8- 0 கே. என். ராஜம், கே. என் கமலம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 வாத்திய இசை 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 இரு வீணைகள் 10 இசை வேளை 10-30 முடிவு.

செவ்வாய் மே 13

காலை 1-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எ, பாஸ்காகுருப் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை 8-30 பல்லடம் கே நாகராஜ ராவ் புல்லாங்குழல் 9. ஒலிபரப்பு முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்தி 1-40 எ. பாஸ்காகுருப் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எ பாஸ்காகுருப் பாட்டு 2-15 கோடைக்கல்வி 2 45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 பல்லடம் கே நாகராஜராவ் புல்லாங்குழல் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 தாளவாத்யக் கச்சேரி 7-15 பலிஞன் மகன் 7.30 தமிழில் செய்திகள் 7-45 சாத்தூர் எ. ஜி. சுப்பிரமணியம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 என். வி வசந்தகோகிலம் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 டி. வி. கிருஷ்ணமூர்த்தி சூலிசை 10 நீங்கள் கேட்டவை 10-30 ஒலிபரப்பு முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

விளங்கிக்கொண்டோம் ஆச்சி; நீங்கள் எங்களை வித்தியாசமாக எண்ண வேண்டாம்; வேற்றுமையாக மதிக்க வேண்டாம்; நீங்களும் நாங்களும் இன்று தொடக்கம் ஒரே குடும்பத்தினர் என்று எண்ணிக்கொள்ளுங்கள்; உங்களை நான் என் சிறிய தாயாகவும் உங்கள் மகளை என் அருமைத் தங்கைச்சியாகவும் இந்த நிமிஷந்தொடக்கம் மதித்துக்கொண்டேன்" என்று கண்களில் நீர்த்தும்பச் சொல்லிமுடித்தாள் சிவபாக்கியம், அவளுடைய வார்த்தைகளைக் கேட்ட சிவகாமியம்மையம்மையும் பெரும சந்தோஷமடைந்தாள்; சிவகாமியம்மை பின்னரும் அளவளாவிக் கலந்துபேசி அன்பு பாராட்டிக்கொண்டு சில நாட்களுக்கிடையில் தான் மீண்டும் அங்கு வருவதாகச் சொல்லி அவர்களிடம அநுமதி பெற்றுக்கொண்டு தங்கள்வீட்டிற்கு மீண்டாள்.

"நல்லாருமுண்டு
பொல்லாருமுண்டு"

தாயும் மகளும் தன்னையுபசரித்த இதமான விதத்தையும் தன்னோடு அன்பு பாராட்டி வார்த்தையாடிய தன்மையையும் சிவகாமியம்மை தன் வீட்டிற்கு மீண்டு போகும்போது நெடுதுநேரம கிணைத்தபடி போவராயினள்; 'ஊரிலே, நல்லாருமுண்டு, பொல்லாருமுண்டு; குலத்தளவேயாகுங் குணமென்பதை இந்த இருவரிடத்தும் இன்று கண்டேன்; குணத்திலே சிறந்தவள் தாயோ மகளோ என்பதை இன்னமும் நான் அறிந்துகொள்ள முடியவில்லை; முன்பின் அறியாத அந்தப் பிள்ளை இன்று நானே என் மகளைப்பற்றிச் சொல்லக் கேட்டவுனே, தன் தங்கையென்று அருமை பாராட்டுகிறாளே; பிள்ளையென்றால், அதிலும் பெண் பிள்ளையென்றால், இப்படியல்லவோ இருக்கவேண்டும்....." என்று இவ்வாறெல்லாம் எண்ணியெண்ணி மனமுருகிவண்ணம் (சிவகாமியம்மை) தங்கள் வீடு போய்ச் சேர்ந்தாள்; தன் தாயாருடையவரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு தங்கள் வீட்டுத் தலைவாசற்க்கலில் நின்ற மகளாகிய சிவபாக்கியம் தாயார் வரவைக் கண்டமாத்திரத்தே முற்பட்டு வந்து "அம்மா, நீங்கள் போன காரியம் எப்படி?" என்றுவினவிக்கொண்டு தாய் முன்செல்ல, அவளைத் தொடர்ந்து பின்சென்றாள்; சிவகாமியம்மை தலைவாசலிலேதான் நிருந்துகொண்டு தன் மகளையும் பக்கலிலே இருக்கச் செய்து, 'மகளே, ஆண்டவன் கிருபை நமக்கு இருக்கும்போது, போகுங் காரியங் கைகூடாமல் விடுமா? அங்கே போய்த் தாயையும் மகளையுங் கண்டபிறகு, அவர்களை விட்டுப் பிரிந்து மீண்டுவர எனக்கு மனமெழவில்லை; என்ன அன்பு! எவ்வளவு உபசாரம்? அவர்கள்வார்த்தையாடும் இனிமையென்ன? இப்படிப்பட்ட குலங்குடியிலுள்ளவர்கள் குணமாகவுள்ளவர்கள் இந்தவூரிலேயிருக்கவும் நாங்கள் இவர்களைப்பற்றி இவ்வளவு காலமும் அறியாமல் இவர்களோடு ஊடாடாமலிருந்தது எங்கள் அதிர்ஷ்டக் குறைவுதான் மகளே; குணம் குடைபோல் தாயைத்திறமென்று சொல்வதா, மகளைத் திறமென்று சொல்வதா என்பது இன்னமும் எனக்குப் புலப்படவில்லை; இப்படிப்பட்டவர்களோடு உறவு பாராட்டி வாழ்ந்தால், எங்களிடத்துள்ள கவலை வறுமை, தனிமை எதுவும் புலப்படா; மகளே, சொல்லுகிறேனென்று வித்தியாசமாக எண்ணிக்கொள்ளாதே: அந்தப் பிள்ளையைக் கண்டவுடனே, அவளே நீயென்றெண்ணி நீ இங்கே வீட்டிலே தனியேயிருக்கிறாயென்பதையும் மறந்துவிட்டேன்; உன்மேல் அந்தப் பிள்ளை பாராட்டும் அன்பை நீ நேரிற் சந்தித்தால் அறியமுடியுமேயொழிய, நான் எப்படிச் சொன்னாலும் அது உனக்குப் புலப்படாது; எங்களிருவரையும் மலாய்நாட்டிற்குப் புறப்படுவதென்றால், தங்களுடன் புறப்படலாமென்றும், தங்கள் செலவிலேயே எங்களைக் கூட்டிக்கொண்டு போகலாமென்றும் அந்தப் பிள்ளை சொல்லியபோது என்னுள்ளம் வெயிலிடை வைத்த வெண்ணெய்போல் உருகியது; மகளே, உன்னை அந்தப் பிள்ளை ஒருமுறையாயினும் தான் பார்க்கவேண்டுமென்று கொண்ட ஆசைக்கு ஒரு அளவில்லை; என்னை இங்கே மீண்டுவர விட அவர்களிருவருக்கும் இஷ்டமில்லை; ஆனாலும் நீ தனியேயிருக்கிறாயென்றகாரணத்தைக் காட்டி நான் ஒருபடியாக மீண்டுவந்தேன்: வரும்போது இன்னுஞ் சிலநாளில் உங்களை வந்து காணுவேன் என்று சொல்லிவிட்டே வந்தேன்" என்றாள்.

பொல்லாத உலகம்
இல்லாதவ ச சொல்லும்

தாய் சொல்லக்கேட்ட பாக்கியலட்சுமி பெரிதும் வியப்படைந்தாள்; அவளையறியாமலே அவள் மனம் அவர்களிடத்தில், அவர்களுள்ளும் விசேஷமாகச் சிவபாக்கியத்தினிடத்திலே படிந்துவிட்டது; அவள் சிவபாக்கியத்தைப்பற்றித் தாயிடம் விசாரிக்க, தாய் சகல விபரங்களையும் இதமாகச் சொன்னாள்; "அம்மா, அப்படியானால் அந்த அக்காளை நான் ஒருமுறையேனும் போய்ப் பார்க்க ஆசைப்படுகிறேன்; என்ன செய்யலாம் சொல்லுங்கள் அம்மா" என்று ஆவலுடன் கேட்டாள்; "மகளே, அந்தப் பிள்ளையிடம் ஒருமுறையேனும் உன்னைக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று நானே அவர்கள் விட்டிலிருந்து மீண்டு வரும்போது நினைத்தேன்; நல்லாரைக் காண்பதவும் நன்றே.....என்று மகளே, நீதானே ஒரு பாட்டுப் படிக்கக் கேட்டிருக்கிறேன்; இப்படிப்பட்ட நல்லவர்களைக் காணுவதும் அவர்களுடைய சொல்லைக் கேட்டு நடப்பதுவும், அவர்களோடு பற்றுயிருப்பதுவும் நல்லதென்பதுதான் என் நம்பிக்கை: ஆனால், எப்படி அவர்களிடம் உன்னைக் கூட்டிக்கொண்டு போவதென்பதையிட்டுத்தான் யோசிக்கிறேன்: மகளே, உன் அப்பர் போனபின்பு நானே எங்கேனும் அருமையாகத்தானே போய்வருகிறேன்: அப்படியிருக்க, உன்னை அங்கு இங்கு கூட்டிக்கொண்டு போனால், பொல்லாத உலகம் இல்லாத வசை சொல்லும்; இதற்குத்தான் பயப்படுகிறேன்" என்று சிவகாமியம்மை கவலையோடு சொன்னாள்; 'அம்மா, நான் பள்ளிக்கூடத்துக்கு வண்டியிலே போய்வந்தவள்தானே ஆனதால் இப்பொழுதும் அந்தவண்டியை ஒழுங்குசெய்து இந்த நிலவுப்பக்கம் முடிவதற்கிடையிற் பொழுதுபட்டபின் ஒருமுறை அங்கே போய் அந்த அக்காளையும் ஆச்சியையுங் கண்டுகொண்டு வரலாமென்றெண்ணுகிறேன்" என்று இதமாகக் கேட்டாள் பாக்கியலட்சுமி; "அது நல்லயோசனைதான் மகளே" என்றாள் தாய் பூரணைத் தினத்திற்கு அடுத்தநாள் பொழுதுபட்டபின் அப்படியே வண்டி ஒழுங்கு செய்துகொண்டு தாயும் மகளும் கண்ணகியம்மை வீட்டிற்குப் போனார்கள்; அங்கு அவர்கள் போகும்போது மணி ஏழுவரையில் ஆய்விட்டது; கண்ணகியம்மையாக, மகள் சிவபாக்கியமாக இவர்கள் அன்று அங்கே வருவரார்களென்ள எள்ளளவும் எதிர்பார்த்திருந்திலர்; அன்புடையாரைக் காத்திரா வண்ணம் காண நேர்ந்தால், அதனால் வரும் மகிழ்ச்சி யதிகமென்றறிஞபவமுடையோர் சொல்லுவரல்லவா? தாயும் மகளும் தங்கள் வீட்டிற்கு வருதலே அந்த நேரத்திலே கண்ட தாயும் மகளும் பெரும சந்தோஷமடைந்தார்களை; 'வாருங்கள், வாருங்கள்: இப்படி வந்திருங்கள்" என்று கண்ணகியம்மை சொல்லி உபசரிப்பதற்கிடையில் சிவபாக்கியம், "அம்மாவும் அம்மாவும் பேசிக்கொண்டிருக்கட்டும், தங்கைச்சி நீங்கள் என்னுடன் வாருங்க"ளென்று பாக்கியலட்சுமியைத் தன் அறைக்குள் அன்புடன் அழைத்துக்கொண்டுபோய் அங்குள்ள "ஸோபா"வில் இருக்கச்செய்து தானும் பக்கலில் இருந்துகொண்டு பரதாதிகேசம் வரையில் பாக்கியலட்சுமியை அன்புடன்பார்த்தாள்; அவளுடையமுதுகை தன் மிருதுவான கரத்தால் மெல்லத் தடவினாள்; பாக்கியலட்சுமி ஒன்றும் பேசாமற் சற்றுநேரம் தலைகுனிந்தவண்ணமிருத்தலும், "தங்காய், நீர் ஓர் உபாத்தியாயாராயிருக்கிறீரே; இப்படி இங்கே வந்து என்னுடன் ஒன்றும் பேசாமல் தலைகுனிந்தவண்ணம் இருக்கும் நீர் பிள்ளைகளைப் படிப்பிப்பதெப்படி" என்று முகத்திலே புன்னகையரும்பக் கேட்டுக் கொண்டு அவளுடைய அழகிய முகத்தைத் தன் மலர்போன்றகையினால் தடவுதலும், பாக்கியலட்சுமி அவளை அன்பு பெருகப்பார்த்து "அக்கா, நான்சிறு பிள்ளைகளுக்கு ஒருஉபாத்தியாராயிருக்கலாமேயொழிய,உங்களைப்போன்ற அறிவாலும் அன்பாலும் குணத்தாலும் மேம்பட்டவர்கள் முன்னிலையில் நானும் ஒரு மாணவிபோலவே என்னை மதிக்கலானேன்." என்று அன்புததும்ப இனிது கூறினாள்.

"பொன்னின் குடமுடைந்தாற்
பொன்னாகும்"

"தங்கைச்சி, உங்கள் தாயாரையும் அவருடைய பெருந்தன்மையையும் ஊடாட்டத்தையும் அன்று நாங்கள் அவதானித்தபோதே நீரும் ஒரு அருமையான தங்கைச்சியாக இருப்பீரென்று என மனத்தில் அபிர்த்தஞ்செய்துகொண்டேன்" என்று சிவபாக்கியம் இதமுறச் சொன்னாள்; கேட்ட பாக்கியலட்சுமியும் மகிழ்ச்சியடைந்தாள்; பின்னர் இருவரும் பரஸ்பரம் அன்புபாராட்டித் தங்களளவில் அளவளாவிப் பேசினார்கள் அப்படிப் பேசியபின்னர் அவ்விருகன்னிபரும் தங்கள் தாய்மார் இருக்கின்ற இடத்திற்கு மீண்டுவந்து அவர்களோடு கலந்துபேசினர்; பேசிக்கொண்டு, சிவகாமியம்மையும் மகளும், நேரம இரவு 9 மணிக்கு மேறபட்டுவிட்டமையினால் தாங்கள் தங்கள்வீட்டிற்கு மீண்டு போகவேண்டுமெனத் தெரிவித்தலும் சிவபாக்கியங் கண்கலங்கினாள்; "தங்கைச்சி, என் கலங்குகின்றீர், எங்கள் வீடு அதிக தூரமல்ல; நீர் விரும்பியபோது தெரிவித்தால் நான் வருவன், கவலைப்படவேண்டாம், எங்கள் மகளும் இனிமேல் உம்மைச் பல நாட்களுக்குக் காணுமல் இருக்கமாட்டாள" என்று ஒருவாறு தேறுதல்சொன்னாள் எனை நூதனம், நீங்கள் இருவரும் முதன்முதல் இன்றுதானே ஒருவரை யொருவர் சந்தித்தீர்கள்; இப்பொழுது உங்கள் நிலைமையைப் பார்த்தால, இருவருஞ் சின்னவயசு தொட்டுப் பழகிவந்த பிள்ளைகள் போற் காணப்படுகின்றீர்களே" என்றாள் கண்ணகியம்மாள்; "அம்மா, நல்லவர் சினேகம் கண்டமாத்திரத்திலே கூடும்; கூடினாலும் பின் இடையில் நீங்கப்போவதில்லை. இடையில் ஏதும் வேற்றுமை வந்தாலும், அவ்வேற்றுமை பின்னர் மாறி ஒற்றுமையாகும்; இதனாலேதான் அம்மா, பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகும் என்று பாடப்பட்டிருக்கிறது; ஆனதால் இந்தத் தங்கைச்சியை இனிமேல் நாங்கள் பிரிந்திருப்பது கஷ்டம்" என்று தாயிடஞ் சொல்ல, தாயும் "மகளே, நீ சொல்வது நிசம்; இதனாலேதான் பெண்பிள்ளைகளும் நல்லாய்ப் படித்திருக்கவேண்டுமென்று நான் சொல்லிவருவது" என்றாள்; இவற்றை கேட்டுக்கொண்டிருந்த பாக்கியலட்சுமி "அக்கா கவலைப்படாதீர்கள், இனிமேல்நான் உங்களோடுதானே பயணம் பண்ணுவேன்; அதன்பின்னும் உங்களோடுதானே சிலகாலமேனும் அந்த நாட்டிலே இருப்பேன்; உங்களை விட்டுப்பிரிய என்னாலும் முடியாது, அருமையான அக்கா" என்று சொல்லி, அவளும் தாயும், அவ்விருவரிடத்தும் விரைவில மீண்டு வருவதாகச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு தம வீட்டிற்கு மீண்டனர். (வரும்)

கடிதர்க்கு விஞ்ஞாபனம்

இப்பத்திரிகைக்குக் கடிதங்களும் ஏதும் சமாசாரங்களையும் எழுதியதவும் அபிமானிகள், சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் என்ற முறையை இயன்றவரையில்அநுசரித்து,தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதியனுப்புதல் வேண்டும். அபிமானிகள் எழுதியனுப்பும் கடிதங்களைத் தொகுக்கவும் திருத்தவும் மிகையானவற்றைத் தவிர்க்கவும், தகாதனவெனக் கண்டவற்றை ஒதுக்கவும் பத்திரிகாசிரியர்களுக்கு அதிகாரமுண்டென்பதையும், இப்பத்திரிகையை ஆதரியாதவர்கள் வெளியிடும்படி எழுதியனுப்பும் கடிதங்கள் இடம்பெறுவென்பதையும் அன்பர்கட்குத் தெரிவிக்கின்றேம்.

—பத்திராசிரியர்.

தேகவியோகம்

சுந்தரேசுவரன்

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபராகவுள்ள திரு. A. R. சண்முகாத்தினம் அவர்களின் மூத்த புதல்வராகிய திரு. சுந்தரேசுவரன் என்னும் மாணவர் தம்மைச் சடுதியிற் பிடித்த வயிற்றுநோய் காரணமாக, சென்ற திங்கட்கிழமை (5-5-47) பிற்பகல் 5 மணிவரையில், தம் பெற்றோர் கதற, உற்றநுறவினர் நண்பர் புலம்ப, கேட்டாரெவரும் மனம் வருந்த தமது இருபதாம் வயதில் இவ்வுலகவாழ்வை யோநுவினர்; இவருடைய ஈமக்கிரியைகள் அடுத்தநாள் பல சுற்ற மித்திரர்சமுகத்தில் விதிப்படியே செய்யப்பட்டன. இவரை அகாலத்திற் பறிகொடுத்துத் தாய்தந்தையர்கொண்ட புத்திர சோகத்தை எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருளே தீர்க்க வல்லது: இவருடைய ஆன்மா சாந்தியடைக.

அறிவித்தல்

கோப்பாய்க் கிராமச்சங்கக்கந்தோர்க் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தத்தில் 1947ம் ஆண்டு வைகாசிமீ 24-க்கு கொடுக்கப்படும். ஒப்பந்தத்தில் கேட்பவர்கள் தங்கள் கேள்விகளைக் கிராமச்சங்கத்தலைவரிடம் 1947ம் ஆ வைகாசிமீ 23க்கு முன் சேரத்தக்கதாய் முத்திரை ஒட்டி உறைக்குள் வைத்து கோப்பாய் கிராமச்சங்கத்தலைவருக்கு என்ற விலாசமிட்டு அனுப்பவேண்டும்.

வேலைகளின் விபரம் கிராமச்சங்கக் கந்தோரில் பார்வையிடலாம்.

Mis 20 9—5—47.

உங்கள் வியாபாரம்
விருத்தியுற
வேண்டுமா?

*

அப்படியானால்

இந்துசாதனத்தில்

விளம்பரஞ் செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமந் உமாபதி சிவாசாரியர் குருபூசை

சர்வசித்து வருஷம் சித்திரைமீ ககூ-ம் உ வெள்ளிக்கிழமை தில்லைவாழ் அந்தணர்களி லொருவரும், சந்தானாசிரியருமாகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியசுவாமிகள் திருநமச்சுத் திரத்தன்று பகல் வேலணை மேற்கு சிவபூசா மண்டபத்தில் நாயனார் குருபூசையும், இரவு ஏழுமணி தொடங்கி வேலணை நடராச வித்தியாசாலையில் திருக்கைலாசபதியாகிய பூ கண்ட பரமசிவனுரால் உபதேசம் பெற்ற அகச்சந்தானத்தின் வழி உபதேசம் பெற்ற புறச்சந்தானாசிரியராய் மெய் கண்டதேவநாயனார் வழித்தோன்றலாம் ஸ்ரீமந் உமாபதிசிவாசாரியசுவாமிகள் சரித்திரம் திரு. செ. கனகசபாபதிப்பிள்ளை யவர்களால் பிரசங்கிக்கப்பட்டது. அங்கு உமாபதி சிவாசாரியசுவாமிகள் பிறப்பு, கல்வியறிவு, ஒழுக்கம், தீக்ஷைப் பேறு, சோழராசாவிடம் பெற்ற விருதுகள், நடராசப்பெருமானின் நித்திய நைமித்திகக்கிரியைகள் சிறப்பு ஞானாசிரியராய மறைஞான சம்பந்த நாயனரிடம் பெற்ற ஞானதீக்ஷை, உபதேசம், கொற்றவன் குடிமடத்தில் இருந்து நன்மாணாக்கர்களுக்கு ஞாதேபதேசஞ்செய்து ஞானசாஸ்திரங்களை உபதேசித்தல், முதனூல் வழிநூல்களின் சார்பாக சிவப்பிரகாசம முதலிய சித்தாந்த சாஸ்திரங்கள் எட்டுடன், கோயிற்புராணம் திருத்தொண்டர்புராணசாரம் திருமுறைகண்டபுராணம், சேக்கிழார் புராணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை முதலிய பிரபந்தங்களைச் செய்தருளல், பெத்தான் சாம்பானுக்கு நடராசப்பெருமான் கொடுத்த "அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் கொற்றங் - குடியார்க் கெழுதிய கைச்சீட்டுப் - படியின் மிசைப் - பெற்றுன் சாம்பானுக்குப் பேதபாதத்தீக்கை செய்து முத்தி கொடுக்கைமுறை" என்று பாசுரப்படி ஞானதீக்ஷை செய்து முத்தி கொடுத்தல், பெத்தான் சாம்பானின் மனைவி தன்னுயகனை மடத்துச்சுவாமியார் கொன்ருரென்ற விண்ணப்பத்தைக் கேட்ட சோழராசனுக்கு அரசனும் சைனியங்களும் பெத்தான் சாம்பான் மனைவிபுங்காணமுள்ளிச்செடிக்கு ஞானதீக்ஷைசெய்து மேற்கதிசெலுத்தல் முதலாம் அளவிறந்த அற்புதங்கள் செய்தாரெனவும் குறிப்பிட்டார்.

மேலும் அருள்நமச்சிவாய தேசிகர் முதலிய தம் மாணாக்கர்களைச் சந்தானவிருத்தி செய்ய நிறுவி சித்திரைமீ அத்தநட்சத்திர தினத்தில் பரிபூரணதசையடைந்தனர் எனவும், நடராசப்பெருமானின் நிருத்ததரிசனத்தைச் சுருக்கிக்கூறியும் முடித்தனர். முன்னும் பின்னும் அருட்பாக்களோதப்பட்டன,

—கடிதம்

அளவெட்டி தமிழ்க்கலை மன்றம்

சித்திரை மாதம் அ (23-4-47) திங்கட்கிழமை காலை 11 மணியளவில் அளவெட்டி தமிழ்க்கலை மன்றத்தாரின் விசேஷ கூட்டமொன்று அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் நிழ்ந்தது. அன்று காலை 10½ மணியளவில் மன்றத் தலைவர் உயர்திரு. பண்டிதமணி சு. நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்களும் உபந்நியாசகர்களும் அளவெட்டி அளகொல்லை விநாயக ராலயத்திலிருந்து ஊர்வலமாகக் கூட்டமண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மண்டபத்தில் அவர்களுக்கு மலர்மாலைகள் அணியப்பட்டன. மன்ற அமைச்சர் திரு. அ பொ. அருணசல மவர்கள் எல்லோரையும் வரவேற்றனர். தலைவ ரவர்கள் தமது தலைமைப் பேருரையில் தமிழ்க்கலை யாக்கத்தின் பொருட்டுத் தமிழ்மக்கள் ஆற்ற வேண்டிய இன்றியமையாத நற்பணிகளை விரித்துரைத்துத் தமிழ்க்கலையின்சில நுட்பங்களையும் விளக்கினர்,

கிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் 'சேக்கிழார்' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில பெரிய புராணச் செய்யுள்கள் இரண்டிற்கு ஆராய்வு முறையால் தாம் கண்ட நயக்களைத் தெரித்து அரியதொரு பிரசங்கஞ் செய்தார்.

ராவ்பகதூர் இராமச்சந்திரன் செட்டியார்அவர்கள் 'தமிழ்க்கலை' என்பதைப்பீடிகையாகக் கொண்டு தமிழர் கலைப்பண்புகளின் பண்டைப் பெருமைகளை விளக்கி விசேஷமாக ஓவியஞ் சிற்பம் என்பவற்றைக் குறிப்பிட்டு நன்கு பேசினர்கள்.

ஈற்றில் மன்ற அமைச்சர் பண்டிதர்திரு க நாகலிங்கம் பேச்சாளர்களுக்குப் வேண்டிய பெரியார்களுக்கும் மன்றத்தின் சார்பான நன்றியறிதலைத் தெரிவித்துப் பேசினர். தலைவர் குறிப்புரையோடு கூட்டம் நிறைவுற்றது.

இம்மன்றத்தால் இம்மாதம் நடாத்த ஒழுங்கு செய்திருந்த மகாநாடு இரண்டொரு மாதம் பின் போடப்பட்டுளது.

உலகியல் உரிவு

1ம் பக்கத் தொடர்ச்சி

சிப்பு இந்து மதத்தினரை ஏமாற்றிப் பற்றிவிடுகிறது! கன்ருயிருக்கிறது மத வளர்ப்பு!

மேற்கூறிய சிலவற்ருல் இந்துமத மக்கள் பறமதம்புகுவதும், புகழ்ணைப்பதும், மத அடிப்படையாகிய மறுமையின்பம் குறித்தில்லையென்பதும், அடிப்படைக் கொள்கையை மறைத்து ஆள் சேர்க்கும் கொள்கையையே பிற மதத்தினர் மேற்கொண்டிருக்கின்றனர் என்பதும் நன்கு தெரியும். "அரைக்காசுக்குப்போன கற்பு ஆயிரம் கொடுத்தாலும் வருமா?" என்பது நம்நாட்டுப்பழமொழி. இந்துக்களாகிய நண்பர்கள் அனைவரும் வாழ்க்கையில மேம்படுதற்கு மத மாற்றம் வேண்டியதில்லை என்பதையும், கடவுணிலையிற்சிறப்படைதற்கே மதக் கொள்கைகள் இன்றியமையாதன வென்பதையும் உணர்வார்களாக.

—தொண்டன்

இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூபா	4, 500, 000, 00
கொடுக்கப்பட்ட வேதனம்	,,	3, 000, 000, 00
சேமநிதி	,,	2, 600, 000, 00

தலைமைக்காரியாலயம்:- பிரின்ஸ்வீதி, கொழும்பு.
நியூயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்வின் ட்ரஸ்ற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ் வங்கி
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பானந்துறை, நாகலை (பழைய நகரமண்டபம்)
யாழ்ப்பாணத்துக் காரியாலயர்:- 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழித்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஒ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

(Std.12 2-8—31-7-47) (F)

சுத்தானந்தம்

யோகி ஸ்ரீ சுத்தானந்தரின் வாழ்க்கை வரலாறும், அன்னரின் அருமை, பெருமை, உபதேசங்களை விளக்கும் கட்டுரைகளும் அடங்கிய அரியநூல். 172 பக்கங்கள்.

தனிப்பிரதி விலை ரூபா 2—8.
தபாற் செலவு 0—6.

ஓம்கார நிலையம்,
புத்தக விற்பனையாளர்கள்,
புதுக்கோட்டை.

யோகி சுத்தானந்தரின் போட்டோ 3—8.

Std 152-5-47—1-6-47.

இந்துசாதனம்

ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

	வாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். ரூ. ச.	வெளியூர். ரூ. ச.	மலாய்நாட்டுக்கு. ரூ. ச
இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம்	6—50	9—50	10—50
இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம்	6—50	9—50	10—50
இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து	10—50	13—50	15—00

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.

விளம்பர மின்றேல் பெரும்பணமில்லை

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai. Jaffna. on Friday, May, 9 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org